மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.03/2021
அ.வ.எண்.82/2015

1. செந்தில்குமார்
2. மதுசூதனன்
3. ராமையன்
4. வெங்கடேசன்
5. லக்ஷ்மையா
6. ராஜேந்திரன்
7. சுகபிரியன்
8. சிவகுமார்
9. வெங்கடேசன்
10. பாலகிருஷ்ணன்
11. நாகராஜன்
12. ராமமூர்த்தி
13. லஷ்மணன்
14. செல்வம்
15. நரசிம்மன்
16. கண்ணன்
17. மணிகண்டன்
18. மணி
19. ராஜேந்திரன்
20. ராதாகிருஷ்ணன்
21. செல்வம்
22. சந்தோஷ்
23. நாகராஜன்
24. விஜயன்
25. கோதண்டன்
26. வரதராஜ் . . . மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

/எதிராக/

1. சீதாராமையர்
2. முரளி
3. ரவிசந்திரன் . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

4. குமார் (எ) கிருஷ்ணஐயர்
5. சந்திரன் (எ) லஷ்மணன்
6. கண்ணையர்

7. மாதவன்
8. செயல் அலுவலர்,
HR & CE, ஸ்ரீ கைலாசநாதர் கோவில். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 19.03.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ரணதேவ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 ம்எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 4,5 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஐ.கே.சதாசிவம் அவர்கள் ஆஜராகியும், 6 மற்றும் 7 ம்எதிர்மனுதாரர்கள் வழக்கை விட்டுக் கொடுத்துள்ள நிலையிலும், 8 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.அழகேசன் அவர்கள் ஆஜராகியும், 8 ம்எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 பிரிவு 10(2) மற்றும் பிரிவு 151 ன் கீழ் உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 6 முதல் 31 பிரதிவாதிகளாக மாற்ற கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்கள் சோரகமலை ஸ்ரீ வேட்டராய சாமி திருக்கோவிலில் அர்ச்சகர்கள் ஆவர். அந்த கோவிலில் 16 ம்மனுதாரரும் மற்றும் சில மனுதாரர்களும் கார்த்திகை மாதம் பூஜை செய்த போது வாதிகளும், பிரதிவாதிகளும் மனுதாரர்களை வழக்கு நிலுவையில் உள்ளதாக கூறி பூஜை செய்வதை தடுத்துவிட்டனர். மனுதாரர்கள் வழக்கறிஞரை வைத்து தேடி பார்த்த போது தான் இவ்வழக்கில் பூஜை செய்வதற்கு 3 கரைகள் உள்ளதாக கூறி வாதிகள் இவ்வழக்கில் கூறியுள்ளது தெரியவந்தது. அந்த சங்கதிகள் பொய்யாகும். வாதிகள் மனுதாரர்களின் உரிமையை ஏமாற்றுவதற்காகவும், பொய்யான தீர்ப்புரை பெறுவதற்காகவும் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

(ii) வழக்கு கோவிலுக்கு மொத்தம் ஆறுகரைகள் உள்ளது. லஷ்மையர் மற்றும் அவருடைய வாரிசுகள் முதல்கரை. ரங்கையர், திருப்பாலி ஐயர் மற்றும் அவர்களுடைய வாரிசுகள் 2ம்கரை. காவேரி ஐயர் மற்றும் அவருடைய வாரிசுகள் 4ம்கரை. ராமையர் மற்றும் அவரது வாரிசுகள் 5ம்கரை. ரங்கையர் மற்றும் அவரது வாரிசுகள் 6ம்கரை. ஒவ்வொரு கரையை சார்ந்தவர்களும் தமிழ்மாதம் தொடங்கியதிலிருந்து ஒவ்வொரு மாதமாக பூஜை செய்வார்கள். மார்கழி மாதத்தில் அனைத்து கரையினர்களும் பூஜை செய்வார்கள். மனுதாரர்கள் அர்ச்சகர்கள் என்று காட்டும் ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளனர்.

(iii) 1 முதல் 3 மனுதாரர்கள் 5ம்கரையை சார்ந்தவர்கள். 4 முதல் 11, 15, 24 ஆகியோர் 1ம் கரையை சார்ந்தவர்கள். 12ம் மனுதாரர் 2ம்கரையை சார்ந்தவர். 12 முதல் 14, 16 முதல் 23, 25, 26 ஆகியோர் 3ம் கரையை சார்ந்தவர்கள். வாதிகளுக்கு 10 நாட்களில் 1/3 பாகம் தான் உள்ளது. 6ம்கரையை சார்ந்தவர்களுக்கு 5 நாட்களில் 1/3 பங்கும், 2ம் கரையை சார்ந்தவர்களுக்கு ஆறுமாதங்களுக்கு ஒரு முறை மாதத்திற்கு நான்கு நாட்கள் உரிமையுள்ளது. எனவே மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என்பதால் இ.ம.எண்.02/2020 தாக்கல் செய்யப்பட்டது. அதில் பிழைகள் இருந்ததால் வலியுறுத்தப்படவில்லை. ஆகவே புதிய இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களை 6 முதல் 31 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2,3ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) 4ம்எதிர்மனுதாரான மாதவன் என்பவரின்தூண்டுதலின் அடிப்படையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் எந்தவித ஆகம பயிற்சிகளும் இன்றி தன் பிழைப்பு தேடி திருக்கோவில் பணியை உதாசீனப்படுத்தி சென்றவர்கள் ஆவார்கள். மனுதாரர்களுக்கும், திருக்கோவிலுக்கும் என்ன தொடர்பு உள்ளது என்பதை காட்ட எந்த ஒரு ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை.

(ii) திருக்கோவிலானது இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளதாகும். வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட பரம்பரை

பூசாரிகள் ஆவார். மேற்படி பூஜை முறைகள் ஒரு வருடத்தில் அடுத்தடுத்த மாதமாக செய்து வந்ததில் குழப்பம் ஏற்பட்டு 3ம்பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.236/2012ல் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணைப்படி வருடம் ஒரு முறை அடுத்தடுத்த நிலையில் செய்ய வேண்டி முடிவானது. அதில் ஏற்பட்ட குழப்பங்களால் பூஜை செய்வதில் பிரச்சனை ஏற்பட்டதால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

(iii) வாதிகள், 1,2 பிரதிவாதிகள் ரங்கசாமி ஐயர் சொந்த பூஜை வகையறா கரையை சேர்ந்தவர்கள். அவர்களுக்கு சின்னதாத்தா கரை பூஜை முறையில் சித்திரை முதல் புரட்டாசி வரை பூஜை செய்யும் உரிமை பெற்றவர்கள். அ.வ.எண்.236/2012 வழக்கில் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணைப்படிக்கு ஷேசய்யர் கரை பூஜையானதை கண்ணையர் தலைமையில் செய்வது போல் சொந்த பூஜை கரையில் கிருஷ்ணஐயர் வகையறா திருக்கோவிலின் பரம்பரை அர்ச்சகரான அன்னு ஐயர் (எ) சஞ்சீவி ஐயர் மகன் சீதாராம ஐயர்தலைமையில் செய்து வர வேண்டியது. லட்சுமண ஐயர் வகையறாவில் 1, 2 பிரதிவாதிகள் தலைமையில் செய்து கொள்ள வேண்டியது. சின்ன ஐயர் வகையறா பூஜையை செல்வம் செய்து கொள்ள வேண்டியது. இவ்வாறாக சமரச தீர்வுக்கு வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் ஒப்புக் கொண்டுவிட்டு அவரவர்கள் பூஜை முறைகளை வகுத்துக்கொண்டு திருக்கோவில் பணிகளை ஒழுங்குபடுத்தி கொள்ள வேண்டியும், அவரவர் பூஜை முறைக்கு தக்க பாதுகாப்பு வேண்டும் என்ற நிலையிலேயே இவ்வழக்கு தொடரப்பட்டது. 4ம்பிரதிவாதி எவ்வித சட்ட அங்கீகாரமும் இல்லாமல் தர்மகர்த்தா என்ற பெயரில் இக்கோவிலில் வரும் வருமானங்களை கையகப்படுத்திக் கொள்வதும், அர்ச்சகர்களிடம் கையூற்று பெற்றும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். இவைகள் முன்தீர்ப்பு தடை மற்றும் முரண்தடை கோட்பாடுகளால் தடை செய்யப்பட்டதாகும். எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3ம்எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

<u>3) 4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 5ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுவில் குறிப்பிட்டுள்ள வயது மற்றும் விலாசம் தவறாகும். இந்த

எதிர்மனுதாரர்களும், மனுதாரர்களும் சோரகமலை வேட்டராய சுவாமி திருக்கோவிலின் பூசாரிகள் என்பதும், கார்த்திகை மாத பூஜை செய்த போது இந்த எதிர்மனுதாரர்கள் தடை செய்தார்கள் என்பதும், இந்த எதிர்மனுதாரர்கள் வாதியுடன் சேர்ந்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும், மனுதாரர்களுக்கு மட்டும் பூஜைமுறையில் உரிமை உள்ளது என்பதும் பொய்யாகும். இவ்வழக்கில் 3 வது தரப்பினர்களான மனுதாரர்கள் அவசியமற்ற தரப்பினர்கள் ஆவர். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இம்மனுவிற்காக போர்ஜரியாக தயாரிக்கப்பட்டதாகும். இந்த ஆவணங்களுக்கும், அசல் வழக்கிற்கும் எந்ததொடர்பும் கிடையாது. எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 4 மற்றும் 5 ம்எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

<u>5) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>6) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் சோரகமலை ஸ்ரீ வேட்டராய சாமி திருக்கோவிலில் அர்ச்சகர்கள் எனவும், அந்த கோவிலில் 16 ம்மனுதாரரும் மற்றும் சில மனுதாரர்களும் கார்த்திகை மாதம் பூஜை செய்த போது வாதிகளும், பிரதிவாதிகளும் மனுதாரர்களை வழக்கு நிலுவையில் உள்ளதாக கூறி பூஜை செய்வதை தடுத்துவிட்டனர் எனவும், மனுதாரர்கள் வழக்கறிஞரை வைத்து தேடி பார்த்த போது தான் இவ்வழக்கில் பூஜை செய்வதற்கு 3 கரைகள் உள்ளதாக கூறி வாதிகள் இவ்வழக்கில் கூறியுள்ளது தெரியவந்தது எனவும், அந்த சங்கதிகள் பொய் எனவும், வாதிகள் மனுதாரர்களின் உரிமையை ஏமாற்றுவதற்காகவும், பொய்யான தீர்ப்புரை பெறுவதற்காகவும் வழக்கை தாக்கல் செய்துள்ளனர் எனவும், வழக்கு கோவிலுக்கு

மொத்தம் ஆறுகரைகள் உள்ளது எனவும், லஷ்மையர் மற்றும் அவருடைய வாரிசுகள் முதல்கரை எனவும், ரங்கையர், திருப்பாலி ஐயர் மற்றும் அவர்களுடைய வாரிசுகள் 2ம்கரை எனவும், காவேரி ஐயர் மற்றும் அவருடைய வாரிசுகள் 4ம்கரை எனவும், ராமையர் மற்றும் அவரது வாரிசுகள் 5ம்கரை எனவும், ரங்கையர் மற்றும் அவரது வாரிசுகள் 6ம்கரை எனவும், ஒவ்வொரு கரையை சார்ந்தவர்களும் தமிழ்மாதம் தொடங்கியதிலிருந்து ஒவ்வொரு மாதமாக பூஜை செய்வார்கள் எனவும், மார்கழி மாதத்தில் அனைத்து கரையினர்களும் பூஜை செய்வார்கள் எனவும், மனுதாரர்கள் அர்ச்சகர்கள் என்று காட்டும் ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளனர் எனவும், 1 முதல் 3 மனுதாரர்கள் 5ம்கரையை சார்ந்தவர்கள் எனவும், 4 முதல் 11, 15, 24 ஆகியோர் 1ம் கரையை சார்ந்தவர்கள் எனவும், 12ம் மனுதாரர் 2ம்கரையை சார்ந்தவர் எனவும், 12 முதல் 14, 16 முதல் 23, 25, 26 ஆகியோர் 3ம் கரையை சார்ந்தவர்கள் எனவும், வாதிகளுக்கு 10நாட்களில் 1/3பாகம் தான் உள்ளது எனவும், 6ம்கரையை சார்ந்தவர்களுக்கு 5நாட்களில் 1/3பங்கும், 2ம் கரையை சார்ந்தவர்களுக்கு ஆறுமாதங்களுக்கு ஒரு முறை மாதத்திற்கு நான்கு நாட்கள் உரிமையுள்ளது எனவும், எனவே மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என்பதால் இ.ம.எண்.02/2020 தாக்கல் செய்யப்பட்டது எனவும், அதில் பிழைகள் இருந்ததால் வலியுறுத்தப்படவில்லை எனவும், ஆகவே புதிய இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களை 6 முதல் 31 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 3ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4ம்எதிர்மனுதாரான மாதவன் என்பவரின் தூண்டுதலின் அடிப்படையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மனுதாரர்கள் எந்தவித ஆகம பயிற்சிகளும் இன்றி தன் பிழைப்பு தேடி திருக்கோவில் பணியை உதாசீனப்படுத்தி சென்றவர்கள் எனவும், மனுதாரர்களுக்கும், திருக்கோவிலுக்கும் என்ன தொடர்பு உள்ளது என்பதை காட்ட எந்த ஒரு ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை எனவும், திருக்கோவிலானது இந்த அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது எனவும், வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட பரம்பரை பூசாரிகள் எனவும், மேற்படி பூஜை

முறைகள் ஒரு வருடத்தில் அடுத்தடுத்த மாதமாக செய்து வந்ததில் குழப்பம் ஏற்பட்டு 3ம்பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.236/2012ல் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணைப்படி வருடம் ஒரு முறை அடுத்தடுத்த நிலையில் செய்ய வேண்டி முடிவானது எனவும், அதில் ஏற்பட்ட குழப்பங்களால் பூஜை செய்வதில் பிரச்சனை ஏற்பட்டதால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது எனவும், வாதிகள், 1,2பிரதிவாதிகள் ரங்கசாமி ஐயர் சொந்த பூஜை வகையறா கரையை சேர்ந்தவர்கள் எனவும், அவர்களுக்கு சின்னதாத்தா கரை பூஜை முறையில் சித்திரை முதல் புரட்டாசி வரை பூஜை செய்யும் உரிமை பெற்றவர்கள் எனவும், அ.வ.எண்.236/2012 வழக்கில் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணைப்படிக்கு ஷேசய்யர் கரை பூஜையானதை கண்ணையர் தலைமையில் செய்வது போல் சொந்த பூஜை கரையில் கிருஷ்ணஐயர் வகையறா திருக்கோவிலின் பரம்பரை அர்ச்சகரான அன்னு ஐயர் (எ) சஞ்சீவி ஐயர் மகன் சீதாராம ஐயர்தலைமையில் செய்து வர வேண்டியது எனவும், லட்சுமண ஐயர் வகையறாவில் 1, 2பிரதிவாதிகள் தலைமையில் செய்து கொள்ள வேண்டியது எனவும், சின்ன ஐயர் வகையறா பூஜையை செல்வம் செய்து கொள்ள வேண்டியது எனவும், இவ்வாறாக சமரச தீர்வுக்கு வாதிகளும், 1,2பிரதிவாதிகளும் ஒப்புக் கொண்டுவிட்டு அவரவர்கள் பூஜை முறைகளை வகுத்துக்கொண்டு திருக்கோவில் பணிகளை ஒழுங்குபடுத்தி கொள்ள வேண்டியும், அவரவர் பூஜை முறைக்கு தக்க பாதுகாப்பு வேண்டும் என்ற நிலையிலேயே இவ்வழக்கு தொடரப்பட்டது எனவும், 4ம்பிரதிவாதி எவ்வித சட்ட அங்கீகாரமும் இல்லாமல் தர்மகர்த்தா என்ற பெயரில் இக்கோவிலில் வரும் வருமானங்களை கையகப்படுத்திக் கொள்வதும், அர்ச்சகர்களிடம் கையூற்று பெற்று இம்மனு தாக்கல் செய்துள்ளார் எனவும், இவைகள் முன்தீர்ப்பு தடை மற்றும் முரண்தடை கோட்பாடுகளால் தடை செய்யப்பட்டது எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3ம்எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) 4 மற்றும் 5ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள வயது மற்றும் விலாசம் தவறு எனவும், இந்த எதிர்மனுதாரர்களும், மனுதாரர்களும் சோரகமலை வேட்டராய சுவாமி திருக்கோவிலின் பூசாரிகள் என்பதும், கார்த்திகை மாத பூஜை செய்த போது இந்த எதிர்மனுதாரர்கள் தடை செய்தார்கள் என்பதும், இந்த எதிர்மனுதாரர்கள்

வாதியுடன் சேர்ந்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும், மனுதாரர்களுக்கு மட்டும் பூஜைமுறையில் உரிமை உள்ளது என்பதும் பொய் எனவும், இவ்வழக்கில் 3 வது தரப்பினர்களான மனுதாரர்கள் அவசியமற்ற தரப்பினர்கள் எனவும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இம்மனுவிற்காக போர்ஜரியாக தயாரிக்கப்பட்டது எனவும், இந்த ஆவணங்களுக்கும், அசல் வழக்கிற்கும் எந்தொடர்பும் கிடையாது எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 4 மற்றும் 5 ம் எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) மனுதாரர்கள் தங்களை வழக்கில் சேர்க்க கோரி ஏற்கனவே இ.ம.எண்.02/20 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 07.01.2021 ல் வலியுறுத்தப்படவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி மனு தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்காததால் அந்த மனுவில் ஏற்பட்ட உத்தரவு இம்மனுவிற்கு முன்தீர்ப்பு தடையாகவும், முரண்தடையாகவும் உள்ளது என 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைத்த கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) மனுதாரர்கள் தரப்பில் 6 கரை உள்ளது எனவும், அதில் மனுதாரர்கள் 1,2,3 மற்றும் 5 வது கரையை சார்ந்தவர்கள் என கூறியபோதும், அதற்கான எந்தவொரு சான்றாவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. இந்நிலையில் இ.ம.எண்.02/2020 ல் மனுதாரர்கள் தரப்பில் நான்கு ஜெராக்ஸ் ஆவணங்கள் தான் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அசல் ஆவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் இம்மனுவில் மனுதாரர்கள் வழக்கு கோவிலின் அர்ச்சகர்கள் என கூறுவதற்கு எந்தவொரு சான்றாவணத்தையும் குறியீடு செய்யவில்லை. எனவே மனுதாரர்கள் வழக்கு கோவிலின் அர்ச்சகர்கள் என கூறுவதற்கும், மனுதாரர்களுக்கு வழக்கு கோவிலில் உரிமையுள்ளது என கூறுவதற்கும் மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தாததால் மனுதாரர்கள் வழக்கு கோவிலின் அர்ச்சகர்கள் என முன்னிலைப்படுத்திய கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பூஜை செய்வதை தடுக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் பூஜை செய்வதை தடுத்தார்களா, 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு பூஜை செய்வதற்கு உரிமை உள்ளதா, இல்லையா என்பதை தான் தீர்மானிக்க வேண்டும். எனவே உத்தேசதரப்பினர்கள் இல்லாமலேயே இவ்வழக்கினை தீர்மானிக்க முடியும் என்பதால் மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் இல்லை என முடிவு செய்து இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு தள்ளுபடி செய்யப்பட்டும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:— இல்லை</u>

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.